முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1331

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.05.2023, திங்கட்கிழமை

1. ஞானவேலி கொண்ட அரங்கனே
ஞானிகள் பலம் கொண்ட தேசிகனே
தானதர்ம மகா சக்தி கொண்டே
தரணியை மாற்ற வந்த குருராஜனே
2. அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 08 ம் நாள், 22.05.2023, திங்கட்கிழமை)
சிந்தை வைத்து உன் திருவடி பற்றி
சித்திகள் வேண்டி உலகோர் தொடர்ந்து வந்தால் போதும்
3. அப்பனே அவர்கட்கெல்லாம் ஞான சித்தி
ஆறுமுகன் யான் உன் கரம்பட அருளிநிற்பேன்
வரமாக உன் தர்மத்தை ஏற்று
வையகம் தன்னில் பரப்பும் மக்களுக்கு
4. தரமாக அவர்கள் வாழ்வும் வளமும்
தரணியில் இனி பிறவா பெரும் பேறு தந்தருள்வேன் ஆறுமுகன் யான்
யானுரைக்க அரங்கன் வழியே சிறந்த வழி
உண்மைநெறிகாட்டும் அரங்கனே சிறந்த ஞானி
5. ஞான வழி பயில விரும்பும் மக்களெல்லாம்
ஞானதேசிகன் அரங்கன் குடில் நோக்கி வந்து
ஞானம் பயில அவர்கட்கு சுப்ரமணியர் என்
ஞானம் சித்தியாகி உலகில் அன்னவர்களெல்லாம்
6. உயர்வாக ஞானிகளாவர் என்பேன்
அப்பனே அரங்கனுள் யானிருந்து அற்புதம் அனுதினமும் நடத்தி வர
வரமாக தொடர்ந்து வந்து வணங்கி வரும் மக்களுக்கு
வாழ்வில் மாற்றங்கள் உறுதிஉறுதி
7. உறுதிகொண்டு உலகையே மாற்றும்
உயர்தத்துவத்தை அரங்கன் வழி யான் இயக்கிவர
கருதிவந்து அரங்கனோடு சரணாகதி
கண்டுவிட்டால் போதும் கலியில் அவர்களும் தேற்றம் காண்பரப்பா

8. அப்பனே அரங்கன் காட்டும் மெய்நெறி
அகிலத்தையே வாட்டத்தில் இருந்து மீட்கும் உயர் நெறியாகும்
வரமென வையகத்தை ஆள்பவர்களும் வணங்கி அரங்கன் குடில்நோக்கி
வந்தால் வையகத்தில் மாற்றம் சடுதி நிகழுமப்பா
ஞான அறிவுரை ஆசி முற்றே

**–சுபம்–**